**Starting time 02.08 P.M.**

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

**O.S. No. 169/2016**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 02.09.2024 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆண்டி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : நான் 2016 ஆம் ஆண்டில்தான் இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால், ஆமாம். 2015-ஆம் ஆண்டிலேயே 2-ஆம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. 29.01.2015 அன்றே 2-ஆம் பிரதிவாதி பாப்பாத்தி இறந்துவிட்டார் என்றாலும், இறந்தபோனவர் மீது நான் போட்டுள்ள இவ்வழக்கே நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், நிலத்திற்காக தான் வழக்கு போட்டேன்.

2. எந்த நிலத்திற்காக வழக்கு போட்டுள்ளேன். புல எண். 235-ல் உள்ள புறம்போக்கு நிலத்திற்காக வழக்கு போட்டுள்ளேன். எனது நிலத்தின் புல எண். என்ன என்றால், 260 பட்டா எண். 21. எந்த ஊரில் உள்ளது என்றால், வேலம்பட்டு. எனது மனைவி பெயரில் உள்ள புல எண். 279-ல் நிலம் உள்ளது. பட்டா எண். 394. மேற்படி புல எண்களை பொறுத்து என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால், நாங்கள் அனுபவித்து வரும் நிலங்களில்

பிரதிவாதி ஆட்களை கூட்டு வந்து பிரச்சனை செய்கிறார். எந்த புல எண்ணில் உள்ள நிலத்தில் பிரச்சனை செய்கிறார் என்றால், புல எண். 235.

3. புறம்போக்கு நிலம் எனது அனுபவத்தில் உள்ளது என்பதை காட்டுவதற்கு ஏதேனும் ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு புறம்போக்கு நிலத்திற்கான ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. புறம்போக்கு நிலத்திற்கு நான் வரி செலுத்தியதற்கான ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தெடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 02.15 P.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.